**07.09.2022 அ.வ.எண். 04/2018 வா.சா.1- ஜெயராமு**

**<u>1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1947ம் ஆண்டு எழுதிவைத்த உயில். நான் 1977ம் ஆண்டு பிறந்தேன். உயில் எழுதிவைத்த அங்கப்பபிள்ளை 1973ல் இறந்துவிட்டார். அவர் இடைப்பட்ட காலத்தில் வேறு உயில் ஏதும் எழுதி வைத்தாரா என்று தெரியாது. 1947ம் ஆண்டு எழுதி வைத்த உயில் தான் கடைசி உயில் என்று நிருபணம் செய்வதற்கு வேறு ஆதாரம் இல்லை. 1947 உயிலின் அசல் என்னிடம் இல்லை. தாவா சொத்தை அங்கப்பபிள்ளை உயில் எழுதி வைத்து 5 வருடங்களுக்கு பிறகு 1952ல் கிரையம் வாங்கியுள்ளார். வா.சா.ஆ.1 உயிலில் தாவா சொத்து காண்பிக்கப்படவில்லை. வா.சா.ஆ,1 உயிலின் படி அங்கப்பபிள்ளையின் பெண்மக்களான கல்யாணி அம்மாள், சின்னம்மாள் ஆகிய இருவருக்கும் A, B இலக்க சொத்துக்களை கொடுத்துள்ளார். தாவா சொத்து தற்சமயம் பெரியகடை வீதியில் உள்ளது, அது முன்பு சின்னக்கடை தெரு என்று அழைக்கப்பட்டது. தாவா சொத்தில், 3ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியசாமி சேர்வை உரக்கடை நடத்தி வருகிறார் என்று சொன்னால் இல்லை. தற்சமயம் தாவா சொத்தை 3ம் பிரதிவாதி, வேறு நபருக்கு உள்வாடகைக்கு விட்டுள்ளார். அதற்கு முன்பு, 2வருடமாக 3ம் பிரதிவாதியின் அண்ணன் மளிகை கடை வைத்திருந்தார். அதற்கு முன்பு யார் கடை நடத்தி வந்தார்கள் என்று தெரியாது. தாவா சொத்தில் நானோ, எனது தகப்பனாரோ எந்த காலத்திலும் நேரடியாக அனுபவம் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி பாண்டியன் எனது அப்பாவுடன் பிறந்தவர். எங்களுக்கும், அவருக்கும் நல்ல உறவு உள்ளது என்று சொன்னால் இல்லை. அங்கப்பபிள்ளை எழுதி வைத்த உயில் படி எனது அப்பாவின் சகோதரர்கள் இதுவரை பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. பாகம் பிரித்து கொடுக்கவேண்டி வழக்கு நடந்ததா என்று ஞாபகம் இல்லை. சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 22-2012 பாகப்பிரிவினை வழகக்கு 2ம் பிரதிவாதி எனது அப்பா மீதும், வல்லததரசு மீதும் தாக்கல் செய்துள்ளா என்று சொன்னால அது பற்றி தெரியாது. அந்த பாகப்பிரிவினை வழக்கில் தாவா சொத்தானது 1வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்று**

சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை வழக்கு 28.08.2014ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடியானதால், விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. ஒருகால் பாகம் கிடைக்கும் பட்சத்தில் எனது அப்பாவுக்கு கிடைக்க வேண்டிய அரை பாகம் மட்டும் தான் கிடைக்கும் என்று சொன்னால் சரியல்ல. பட்டா எண். 3799 என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவில் கண்டுள்ள சொத்து உயில் மூலம் கிடைத்த சொத்தாகும். 1ம் பிரதிவாதி பெயரில் வேறு சொத்துக்கு வேறு பட்டா உள்ளது. அந்த சொத்தும் 1ம் பிரதிவாதிக்கு உயில் மூலமாக கிடைத்த சொத்தாகும். திருப்பத்தூர் கீழரத வீதியில் உள்ள க.எண். 8-4-22, வீட்டின் வாடகையை வசூல் செய்ய வேண்டி திருப்பத்தூர் முன்சீப் கோர்டில் அ.வ.எண். 27-97 வழக்கில் எனது அப்பாவும், 2 சித்தப்பாக்களும் சேர்ந்து நிலவழ வங்கிக்கு எதிராக வழக்கு போட்டார்கள், அதுவும் உயிலில் கண்ட சொத்து தான். 28.09.1988ல் எனது அப்பா மற்றும் அவரது இரு சகோதரர்களும் சேர்ந்து ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி அதன்படி சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த 28.09.1988 உடன்படிக்கையின் படி தாவா சொத்து, 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1968ம் ஆண்டிலிருந்து 3ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியசாமி சேர்வை தொடர்ந்து உரக்கடை நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு அங்கப்பபிள்ளை அச்சடித்த வாடகை ரசீது கொடுத்து, வாடகை வசூல் செய்து வந்தார் என்றும், அந்த வாடகை ரசீதுகளை 3ம் பிரதிவாதி வசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அங்கப்பபிள்ளை இறந்த பிறகு அவரது மகன் சித்திகணபதி, பெரியசாமி சேர்வையிடம் வாடகை வசூல் செய்துவந்தார் என்றும், அவர் இறந்த பிறகு 1996லிருந்து 1ம் பிரதிவாதியின் தகப்பனார் வல்லத்தரசிடம் 2012ல் கிரையம் வாங்கும் வரை வாடகை தொடர்ந்து கொடுத்துவந்தோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா கடைக்கு, 2012க்கு பிறகு கடை வரி, வீட்டு வரி, மின்சார கட்டணம் நாங்கள்

செலுத்தவில்லை. 1, 3 பிரதிவாதிகள் மீது தாவா சொத்தை கிரையம் வாங்கியது சம்மந்தமாக கொடுத்த புகாரின் பேரில் நடந்த கிரிமினல் வழக்கு திருப்பத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு பிறகு விடுதலை செய்யப்பட்டது. மேற்படி உண்மைகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு ˙உள்வாடகைக்கு விட்டது சம்மந்தமாக எந்த தகவலும், பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி சரியான பிரதிவிலையேற்றத்தின் பேரில் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நானோ, எனது தகப்பனாரோ எந்த காலத்திலும் தாவா சொத்திற்கு வாடகை வசூல் செய்ததில்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மலேசியா, சிங்கப்பூரில் குடியிருந்து தனிப்பட்ட முறையில் தொழில் செய்து பெரும் செல்வந்தராக சொத்துக்களை வாங்கி வாழ்ந்து வந்தார். அவருடைய தொழில் வளர்ச்சியில் பொறாமை கொண்டு நானும், எனது சித்தப்பா பாண்டியனும் அவர் மீது திருப்பத்தூர் ˙நீதிமன்றத்தில் பல வழக்குகள் போட்டோம் என்று சொன்னால் சரியல்ல. காரைக்குடி மாவட்ட பதிவாளர், கிரைய பத்திரத்தை ரத்து செய்ய தங்களுக்கு அதிகாரமில்லை என்றும், சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. 3ம் பிரதிவாதி நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் வாங்கிய நபர் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா முழு சொத்திலும் எங்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லவில்லை என்றும், 1ம் பிரதிவாதிக்கும் 1/3 பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் முரண்பாடு இருப்பதால் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.